# செய்தி வெளியீடு

## முதலமைச்சர் கணினித் தமிழ் விருது

தமிழ் வளர்ச்சித் துறையால், தமிழ் வளர்ச்சிக்காகச் சிறந்த தமிழ் மென்பொருளை உருவாக்குபவரை ஊக்குவிக்கும் வகையில் 2013ஆம் ஆண்டு முதல் **முதலமைச்சர் கணினித் தமிழ் விருது** வழங்கப்பட்டு வருகிறது. விருது பெறுபவர்களுக்கு விருதுத் தொகையாக ரூ. 1,00,000, ஒரு சவரன் தங்கப்பதக்கம் மற்றும் தகுதியுரை வழங்கப்படும்.

இவ்வகையில் 2016ஆம் ஆண்டுக்கான **முதலமைச்சர் கணினித் தமிழ் விருது**க்கு விண்ணப்பிக்க இறுதி நாள் 31.12.2016 என ஏற்கெனவே அறிவிக்கப்பட்டது.

தற்போது, இவ்விருதுக்கு விண்ணப்பிக்கும் காலம் **31.1.2017 வரை** நீட்டிக்கப்பட்டுள்ளது.

இவ்விருதுக்குரிய விண்ணப்பம் மற்றும் விதிமுறைகளைத் தமிழ் வளர்ச்சித் துறையின் வலைதளத்தில் (www.tamilvalarchithurai.org) விண்ணப்பப் படிவங்கள் பகுதியிலிருந்து இலவசமாகப் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

விருதுக்கான விண்ணப்பம் தமிழ் வளர்ச்சி இயக்ககத்திற்கு
வந்து சேர வேண்டிய இறுதி நாள் **31.1.2017**

# அனுப்ப வேண்டிய முகவரி

**தமிழ் வளர்ச்சி இயக்குநர்**
தமிழ் வளர்ச்சி வளாகம்
தமிழ்ச் சாலை, எழும்பூர்
சென்னை – 600 008

**தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி எண்கள்:** 044 28190412, 044 28190413

**மின்னஞ்சல் :** tamilvalarchithurai@gmail.com

**வலைத்தளம் :** www.tamilvalarchithurai.org

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**